<u>சாட்சியின் வாக்குமூலம்</u>

<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

**COS No. : 141/2025**

**DW1 – திரு. சேகர் த/பெ. சீதாபதி**

**24.04.2026**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**நேரம் 15.11 மணி**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9 ஆம் வகுப்பு பாஸ் ஆகியுள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். ஆங்கிலம் எனக்கு கொஞ்சம் தெரியும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நான் Ex Service Man. 1999 ல் பணி ஓய்வு பெற்றேன். அதன்பிறகு என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் செங்கல் சூளை பிஸ்னஸ் செய்து வந்தேன். பணம் வாங்கும் போது என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் செங்கல் சூளையில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. நான் தொழிலை 2011 ல் விட்டுவிட்டேன். பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் உரிமையாளர் நான் தான் என்றால் சரிதான். பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் எப்போது ஆரம்பித்தேன் என்றால் 2005 ஆம் வருடம் ஆரம்பித்தேன். அந்த நிறுவனத்தை நான் தற்போது நடத்தவில்லை. நான் இந்த வழக்கில் பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் என்ற பெயரில் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி நிறுவனம் 2011 ல் மூடிவிட்டேன் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் நிறுவனத்திற்கு VAT செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் நிறுவனத்தில் என்ன பணி நடந்தது என்றால் செங்கல் சூளையில் ஆட்களை வைத்து செங்கல் அறுப்போம். அது நடக்கும்போது கணக்கு வழக்குகளை பராமரித்தேனா என்றால் செங்கல் சூளையை நடத்தி

வரும்போது கணக்கு வழக்குகளை பராமரித்தேன். பாலு என்பவர் கமிஷன் ஏஜெண்ட் என்றால் சரிதான். பாலு அடமான பத்திரம் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பாலுவிற்கு எவ்வளவு கமிஷன் கொடுத்தேன் என்றால் 1 சதவீத அல்லது 0.5 சதவீதமா என்று ஞாபகமில்லை. எனக்கு எதற்கு பணம் தேவைப்பட்டது என்றால் செங்கல் சூளையில் நஷ்டமாகிவிட்டது. என் மகளுக்கு 2015 ல் திருமணம் நடத்தி வைத்தேன் அதிலும் கடனாகிவிட்டது. என்னிடம் காட்டப்படும் அடமான பத்திரத்தின் 3 ஆம் பக்கத்தில் என்னுடைய தொழிலுக்காக பணம் அவசரமாக பணம் தேவைப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பணம் தொழிலுக்காக தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. கடனாகிவிட்டது ஆகவே தான் பணம் வாங்கினேன். ரூபாய் 75 லட்சம் பணத்தை யார் பெயரில் கொடுத்தார்கள் என்றால் பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் பணம் கொடுத்தார்கள். செக்காக பணம் கொடுத்தார்கள். அதை நான் என் வங்கி கணக்கில் செலுத்தி பணம் எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி காசோலையை 2017 ல் கொடுத்தார்கள் என்றால் சரிதான். பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் நிறுவனம் இருக்கிறது என்று நான் சொன்னதால் தான் தெரியும் என்றால் சரிதான். அவர்கள் இடத்தை வந்து ஆய்வு செய்தார்கள். அவர்கள் இடத்தை ஆய்வு செய்யும் போது அங்கு போர்டு இருந்ததா என்றால் செங்கல் சூளைக்கு போர்டு கிடையாது. நான் கொடுத்த வங்கி கணக்கை வைத்து தான் வங்கி கணக்கில் தான் பணம் செலுத்தினார்கள். வங்கி கணக்கு பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். நான் பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் நிறுவனத்தின் பெயரில் அடமான கடன் கேட்டதால் அந்த நிறுவனத்தின் பெயரில் கடன் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அடமான பத்திரம் சென்னையில் வைத்து எழுதப்பட்டது சென்னையில் என்றால் சரிதான். ஆனால் பதிவு செய்யப்பட்டது பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகம் என்றால் சரிதான். அடமான பத்திரத்தில் உள்ள அனைத்து விவரங்களும்

எனக்கு தெரியும் என்றால் சரிதான். அடமான பத்திரத்தில் ரூபாய் 75 லட்சம் பாலாஜி பிரிக்ஸ் இண்டஸ்டிரிஸ் நிறுவனம் பெயரில் பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூபாய் 75 லட்சம் கடனுக்கு எத்தனை சதவிகிதம் வட்டி என்றால் 9 அல்லது 12 சதவிகித வட்டியா என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. அடமான பத்திரத்தில் பணத்தை 30 தவணைகளாக திரும்ப கொடுக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் 20 தவணைகள் ரூபாய் 3,45,000/- மற்றும் 21 முதல் 29 தவணைகள் மாதம் ரூபாய் 3,00,000/- மற்றும் 30 ஆவது தவணை ரூபாய் 2,25,000/- கொடுக்க வேண்டும் என்றாலும் அந்த தவணை தொகைகளை ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவணையை தொகையை கட்டவில்லை என்றால் 3 சதவிகிதம் Penal Interest என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.1 யார் கொடுத்தது என்றால் வாதி கொடுத்ததாகும். அது தற்போது என்னிடமுள்ளதா என்றால் அதை வேறு ஒரு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 30 தவணைகளையும் தேதியுடன் லோன் கார்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 10-07-2017 முதல் 10-01-2020 வரை தேதி குறிப்பிட்டு தவணை தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் திரும்ப கொடுக்கும் தவணையை காசோலையாக கொடுப்பேன். 1 ஆவது தவணையை எப்போது கட்டினேன் என்றால் 11 காசோலையாக வாங்கிவிட்டார்கள். அவர்கள் தான் காசோலையை வங்கியில் செலுத்திவிடுவார்கள். நான் லோன் கார்டு அங்கு எடுத்து சென்று பதிவுசெய்வேன். 1 ஆவது தவணை 11-08-2017 மற்றும் 2 ஆவது தவணை 15-09-2017 பதிவு உள்ளது என்றால் சரிதான். 3 ஆவது தவணை அக்டோபர் 2017 ல் பதிவு இல்லை என்றால் சரிதான். நான் முதலிலேயே காசோலையை கொடுத்துவிட்டேன். அதற்கு பிறகு 3 ஆவது தவணை 13-11-2017 அன்றும் 4 ஆவது தவணை 19-11-2017 அன்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 காசோலைகள் பணம்

இல்லை என்று திரும்ப வந்துவிட்டது என்றால் என்னிடம் சொல்லாமல் வங்கியில் காசோலைகளை செலுத்தியதால் அதன் பின்னர் நான் என் வங்கி கணக்கில் பணத்தை செலுத்தி பின்னர் அதே காசோலையை வங்கியில் செலுத்தி 3, 4 தவணைக்கான பணத்தை எடுத்துக்கொண்டார்கள். 5 ஆவது தவணை அதன் பின்னர் 4 மாதம் கழித்து 14-03-2018 அன்று கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி தவணைகள் அனைத்து 10 ஆம் தேதிக்கு பின் தான் வங்கியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 6 ஆவது தவணை 27-03-2018 அன்று கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் ரூபாய் 10 லட்சம் APC Finanace என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். APC Finanace வேறு நிறுவனம் PC Chowdary வேறு நிறுவனம் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்து இரண்டு நிறுவனங்களும் ஒரே நிறுவனங்கள் தான். 7 ஆவது தவணை 12-04-2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு 4 மாதம் கழித்து 13-08-2018 அன்று தான் 8 ஆவது தவணையை செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பிறகு 9 ஆவது தவணையை 13-11-2018 அன்று செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னர் 10 ஆவது தவணையை 17-11-2020 அன்று ரூபாய் 3 லட்சம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அதன் இடையில் கொரோனா காலம் வந்துவிட்டது. லோன் 10-06-2018 முதல் 10-01-2020 வரை நான் எந்த தவணையையும் செலுத்தி வில்லை என்றால் சரிதான். லோன் அட்டையில் எந்த கையொப்பமும் இல்லை என்றால் அது அவர்கள் கொடுத்த கார்டு ஆகும். அதில் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. 11 காசோலைகளை கொடுத்த விவரத்தை அடமான பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. 13-11-2018 பிறகு நான் எந்த தொகையும் செலுத்தவில்லை என்றால் 17-11-2020 ரூபாய் 3 லட்சம் கொடுத்தேன். 13-11-2018 அதன் பிறகு மார்ச், 2020 கொரோனா காலகட்டம் ஆரம்பிக்கும் வரை நான் எந்த பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். என்னுடைய ரூபாய் 54 லட்சத்திற்கு காசோலையை செலுத்தி அதில் பணம்

இல்லாமல் காசோலை திருப்பப்பட்டதால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு கொடுத்த பிறகு தான் நான் வாதி நிறுவனத்தை சந்தித்து மறுபடியும் ரூபாய் 3 லட்சத்தை 17-11-2020 அன்று கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பின்னர் மற்றொரு காசோலை ரூபாய் 47 லட்சத்திற்கு கொடுத்து அந்தகாசோலையும் வங்கியில் பணம் இல்லாமல் திருப்பப்பட்டது என்றால் EMI க்காக கொடுத்த 11 காசோலைகளை வங்கியில் செலுத்தி பணத்தை பெற்றுக்கொண்டு மீதமுள்ள 2 காசோலைகளை முன் அறிவிப்பு இல்லாமல் கொடுத்துவிட்டார்கள். நான் காசோலையில் கையொப்பம் மட்டும் போட்டு கொடுத்தேன் பணத்தை பூர்த்தி செய்யவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபிறகு நான் கொடுக்க வேண்டிய பணத்தை ஒப்புக்கொண்டு ரூபாய் 3 லட்சம் பணம் கொடுத்தேன் என்றால் EMI குறித்து நான் கேட்க போகியிருந்தேன் ரூபாய் 54 லட்சம் மற்றும் 47 லட்சம் எவ்வாறு வந்தது என விசாரித்தேன் Clerk அவ்வாறு போட்டதாக சொன்னார். காசோலை திருப்பப்பட்ட பிறகு என் மீது காசோலை அவமதிப்பு வழக்கு போடப்பட்டது என்றால் சரிதான். அந்த 2 வழக்குகளிலும் என்னை குற்றவாளி என தீர்மானித்து தண்டனை வழங்கப்பட்டது என்றால் சரிதான். கடைசியாக ரூபாய் 3 லட்சம் கொடுத்த பிறகு தற்போது வரை வேறு எந்த பணமும் செலுத்தவில்லை என்றால் சரிதான். லோன் கார்டில் 30 தவணைகள் என்று போட்டிருக்கும்போது நான் 30 காசோலைகள் கொடுத்தேனா என்றால் இல்லை, 11 காசோலைகள் தான் கொடுத்தேன். நான் ஒவ்வொரு மாதமும் நிறுவனத்திற்கு வந்து காசோலை கொடுத்தேன் என்றாலும் வழக்கிற்காக தற்போது மாற்றி 11 காசோலைகளை மொத்தமாக கொடுத்துவிட்டேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடைசியாக கொடுத்த 2 காசோலைகள் 3 வருடம் தவணை தொகை எதுவும் கட்டாததால் அதற்காக பணம் சேர்த்து போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காசோலை அவமதிப்பு வழக்கு தொடுக்கப்பட்ட பின்பு தான் Chennai City Civil நீதிமன்ற TN Prohibition of Exorbitant Interest Act ன் கீழ் வழக்கு பதிவு

செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பை மேல் முறையீடு உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டது என்றால் சரிதான். உயர்நீதிமன்றம் மேற்படி வழக்கை தள்ளுபடி செய்துள்ளது என்றால் சரிதான். வாதிகளுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்பதற்காக மேற்படி வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதி நிறுவனத்திற்கு கொடுத்த பணத்தை காசோலைகள் மூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பணமாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த ரூபாய் 44,05,000/– பணம் கொடுத்ததற்கான என்னுடைய வங்கி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**நேரம் 16.05 மணி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.